# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 30 செவ்வாய்க்கிழமை 15.10.2024 கதிர் 388







# ஐக்கிய நாடுகளின் உதவிச் செயலாளர் நாயகம் பிரதமர் ஹரிணி அமரசூரியவைச் சந்தித்தார்!

## கல்விச் சீர்திருத்தம், டிஜிட்டல் மாற்றம் தொடர்பில் ஆராய்வு



பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் ஐக்கிய நாடுகளின் உதவிச் செயலாளர் நாயகம் கன்னி விக்னராஜா ஆகியோருக்கு இடையில் பிரதமர் அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் உதவிப் பொதுச் செயலாளர் கன்னி விக்னராஜா, பிரதமருக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தார்.

இதன் போது, இலங்கையில் கல்விச் சீர்திருத்தம் மற்றும் டிஜிட்டல் மாற்றம் மூலம் பொதுத்துறையை நவீனமயமாக்குவதில் ஐக்கிய நாடுகளின் கவனம் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

2➤

## கைத்தொழில் உற்பத்தியில் வளர்ச்சி!

கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 1.2 சதவீத வளர்ச்சியைக் காட்டியுள்ளது.

2023 ஒகஸ்டில் 90.2 ஆக இருந்த கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் , இந்த ஆண்டு ஒகஸ்டில் 91.3 ஆக உயர்ந்துள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் துறை தெரிவித்துள்ளது.

இதில், உணவு உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், இந்த ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் பானங்கள் மற்றும் புகையிலை தொடர்பான உற்பத்திகளில் வீழ்ச்சி காணப்பட்டதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், ஜூலை மாதத்துடன் ஒப்பிடுகையில், ஒகஸ்ட் மாதத்தில் நாட்டின் உத்தியோகபூர்வ வறுமைக் கோடு சற்று குறைந்துள்ளது. ஜூலை மாதத்தில் 16,373 ரூபாவாக இருந்த வறுமைக் கோடு ஒகஸ்ட் மாதத்தில் 16,152 ரூபாவாக குறைந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

2023 ஒகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடுகையில் இது அதிகரிப்பாகும் என மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (04)

## இலங்கை – இந்தியா தரைவழிப் பாதைத் திட்டம் பேச்சுக்கள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளன!

### சுற்றாடல் அமைச்சின் செயலாளர் தகவல்



இலங்கையையும் இந்தியாவையும் தரைவழியாக இணைக்கும் வகையில் நிர்மாணிக்கத் திட்டமிடும் உத்தேச பாதைத் திட்டம் தொடர்பான பேச்சுக்கள் தற்போது இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதாக சுற்றாடல் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இந்தத் தகவலைக் கூறியுள்ளார்.

கடந்த மாதம் புதுடில்லியில் இது தொடர்பான கூட்டத்தில் இலங்கையின் உயர்மட்ட குழு பங்கேற்றது. ராமேஸ்வரத்துக்கும் திருகோணமலைக்கும் இடையே நெடுஞ்சாலை மற்றும் புகையிரத இணைப்பை ஏற்படுத்துவது தொடர்பான

2➤



## ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் வலுச்சக்தி முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல்!

வலுச்சக்தி அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, ஏனைய நாடுகளில் வலுச்சக்தித் துறைக்கு உயர்ந்த நிலை வழங்கப்பட்டுள்ளதைப் போன்று இலங்கையிலும் வலுச்சக்தித் துறைக்கு முன்னணி இடம் வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, வலுச்சக்தி அமைச்சு என்பது நிதி வருமானங்களைப் பெறும் அமைச்சு எனவும், அதிக வருமானம் கிடைக்கும்போது முறைகேடுகள் இடம்பெறலாம் என்ற கருத்து சமூகத்தில் நிலவுவதாகவும் தெரிவித்தார்.

இவ்வருட ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தமது விருப்பத்தை எதிர்பார்ப்புடன் பயன்படுத்தியுள்ளதாகவும், அந்த ஆணைக்கு தான் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பழைய அரசியல் கலாசாரத்தின் மீதான எதிர்ப்பு,

2➤

## கடவுச்சீட்டு வழங்கும் பணிகள் திங்கட்கிழமை முதல் வழமைக்கு

எதிர்வரும் திங்கட்கிழமை (21) முதல் வழமை போன்று கடவுச்சீட்டு வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக் களத்தில் இன்று (15) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு தகவல் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த 11ஆம் திகதி விசேட அமைச்சரவை கூடி, கடவுச்சீட்டு தொடர்பில் கலந்துரையாடியதாகவும் அவர் தெரிவித்தார். (04)

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரசைகள் எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகள் மற்றும் அரச சேவையின் செயற்பாடுகள் தொடர்பான மக்களின் அதிருப்தி காரணமாக புதிய அரசியல் சம்பிரதாயத்தினை மக்கள் எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு மோசடி, ஊழல் மற்றும் வீண் விரயம் என்பனவே காரணமாக அமைந்ததென மக்கள் நம்புவதாகவும், அதனைத் தடுப்பதற்காகவே இம்முறை மக்கள் ஆணை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, அரச பொறிமுறை முழுவதும் பரவியுள்ள மோசடி மற்றும் ஊழலைத் தடுப்பதற்காக மக்கள் வைத்துள்ள நம்பிக்கையைத் தான் பாதுகாக்க முயற்சிப்பதாகவும் தெரிவித்தார்.

மக்களைத் திருப்திப்படுத்தும் வகையில் வினைத்திறன்மிக்க மற்றும் செயற்றிறன்மிக்க அரச சேவையை உருவாக்குவதற்கு தற்போதைய அரச உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பு அவசியமானது எனவும், அதற்காக எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கூறியுள்ளார்.

இந்த முறை மக்கள் வழங்கிய ஆணையின் கட்டமைப்பு, நோக்கம் மற்றும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு அரச உத்தியோகத்தர் கடமை உணர்வுடனும் பொறுப்புடனும் செயற்பட வேண்டுமெனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்குரிய அரசியல் தலைமைத்துவத்தை வழங்க தமது தரப்பு தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

அடுத்த மூன்று ஆண்டுகளில் வலுச்சக்தித் துறையின் இலக்குகளை எவ்வாறு அடைவது என்பது குறித்தும், மக்களுக்கு வழங்கக்கூடிய குறுகிய மற்றும் நீண்ட கால நிவாரணங்கள் குறித்தும் அங்கு மேலும் கலந்துரையாடப்பட்டிருந்ததாகத் தெரியவருகிறது.

வலுச்சக்தி அமைச்சின் செயலாளர் உதயங்க ஹேமபால, மின்சார சபைத் தலைவர் கலாநிதி திலக் சியம்பலாபிடிய, மின்சார சபைப் பொது முகாமையாளர் பொறியியலாளர் கே.ஜீ.ஆர்.எப்.கொமெஸ்டர், பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் ஜனக்க ராஜ கருணா உள்ளிட்ட அமைச்சின் உயர் அதிகாரிகள் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தனர். (04)

## ஐக்கிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதேவேளை, இலங்கையின் நிலையான அபிவிருத்திக்காக இலங்கைக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துதல், சமூகப் பாதுகாப்பு, கல்விச் சீர்திருத்தங்கள் மற்றும் டிஜிட்டல் மாற்றத்தின் ஊடாக பொதுத்துறையை நவீனமயப்படுத்துதல் ஆகியவற்றுக்கு இச்சந்திப்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டிருந்தது.


இந்தச் சந்திப்பில் பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, பிரதமரின் மேலதிக செயலாளர் மஹிந்த குணரத்ன, ஐக்கிய நாடுகளின் வதிவிட இணைப்பாளரும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் வதிவிடப் பிரதிநிதியுமான அசுசா குபோட்டா, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் டிஜிட்டல் மற்றும் புத்தாக்கக் குழுவின் தலைவர் ஃபாடில் பாக்கிர் மற்றும் வெளிவிவகார அமைச்சின் ஐ.நா மனித உரிமைகள் பணிப்பாளர் நாயகம் தயானி மெண்டிஸ் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (04)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இறுதிக் கலந்துரையாடல்கள் இதன்போது நடைபெற்றன.

முன்மொழியப்பட்ட தரைவழி இணைப்பை ஏற்படுத்த மதிப்பிடப்பட்டுள்ள செலவு சுமார் 5 பில்லியன் அமெரிக்க டொலராகும். இந்த முழுச் செலவையும் இந்தியா ஏற்கும், என்றும் அவர் தெரிவித்துள்ளார். (04)



# வியாழக்கிழமையன்று ரணில் விசேட உரை!

முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் வியாழக்கிழமை விசேட உரையொன்றை ஆற்றவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் இந்த விசேட உரை மூலம் நாட்டின் அரசியல் நடத்தை மற்றும் எதிர்காலத் திட்டங்களை வெளிப்படுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த தேர்தலில் போட்டியிடப் போவதில்லையெனவும் தேசியப் பட்டியலிலிருந்து நாடாளுமன்றத்திற்கு வரப்போவதில்லையெனவும் அவர் முன்னரே தீர்மானித்திருந்தார்.

ஆயினும், பொதுத் தேர்தலில் சமையல் எரிவாயுச் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடும் புதிய ஜனநாயக முன்னணிக்கு அவர் தலைமை தாங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (04)

# ரயிலில் தீ பரவியது!

களுத்துறையில் இருந்து மருதானைக்கு இயக்கப்படவிருந்த ரயிலின் இயந்திரத்தில் தீப்பரவல் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

களுத்துறை ரயில் நிலையத்திற்கு அருகில் வைத்து இவ்வாறு தீ விபத்து ஏற்பட்டதாகவும், இதன் காரணமாக கரையோர ரயில் மார்க்கத்தில் போக்குவரத்து பாதிக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இன்று காலை 7 மணியளவில் களுத்துறையில் இருந்து பயணிக்க ஆரம்பித்த ரயில் களுத்துறை ரயில் நிலையத்திற்கு அருகில் தீப்பிடித்துள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

ரயிலின் பின் இயந்திரத்தில் தீ பரவியதையடுத்து களுத்துறை மாநகரசபையின் தீயணைப்புப்பிரிவினர் தீயை அணைத்துள்ளனர்.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை எனவும், ரயிலின் பயணம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், குறித்த ரயிலில் இருந்த பயணிகள் மற்றுமொரு ரயில் மூலம் மருதானைக்கு அழைத்து வரப்பட்டதாகவும், இதன் காரணமாக கரையோர மார்க்கத்தில் தாமதம் ஏற்பட்டது எனவும் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# பெண்ணை இழுத்துச் சென்ற முதலை! சொறிக்கல்முனையில் துயரச் சம்பவம்

(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனையை அடுத்துள்ள கிட்டங்கியில் வெள்ளம் நிறைந்து வரும் இன்றைய சூழலில் அதனை அண்டிய ஆற்றுப்பகுதியில் பெண் ஒருவரை முதலை இழுத்துச் சென்றுள்ளது.

இச்சம்பவம் கிட்டங்கியை அண்டிய சொறிக்கல்முனை புட்டியாறு பகுதியில் நேற்று (14) திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. இத்துயரச் சம்பவம் அப்பகுதி மக்களைச் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

சொறிக்கல்முனையைச் சேர்ந்த 58 வயதான ஞானப்பிரகாசம் டூரியநாயகி எனும் பெண்ணையே முதலை இழுத்துச் சென்றுள்ளதாகத் தெரிகிறது.

தொடர்ச்சியான மழை காரணமாக ஆறுகளில் நீர் அதிகரித்துள்ளது. சாய்ந்தமருது - மாவடிப்பள்ளி நீர் ஓடையில் வழமையாக முதலைகளின் நடமாட்டம் அதிகமாக இருக்கும் நிலையில், தற்போதும் இவை மழை வெள்ளத்துடன் கிட்டங்கி ஆறு உட்பட பல இடங்களுக்கு நகர்ந்துள்ளன.

இவ்வாறு முதலை நடமாட்டம் உள்ள இடங்கள், அபாயகரமான பிரதேசங்களில் குறித்த பிரதேச சபைகள், சுற்றுச் சூழல் அதிகாரிகள், வன பரிபாலன சபையினர் போன்றோர் பொதுமக்களுக்கு தெளிவூட்டும் வகையில் எச்சரிக்கைப் பலகைகளைக் காட்சிப்படுத்த வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# உண்மையான அரசியல் செய்ய நிதி தேவையில்லை! யாழில் வேட்பாளர் வைத்தியர் அருச்சுனா தெரிவிப்பு

யாழ். தேர்தல் மாவட்டத்தில் ஆறு ஆசனங்களையும் நாங்கள் பெற்றுக்கொள்வோம். ஒரு விளையாட்டு வீரனாக தோல்வியையும்ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவமும் எனக்கு உண்டு, என சுயேட்சைக் குழு 17 இன் முதன்மை வேட்பாளர் வைத்தியர் இராமநாதன் அருச்சுனா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில்நேற்றைய தினம்திங்கட்கிழமை நடைபெற்ற வேட்பாளர் அறிமுக நிகழ்வில் உரையாற்றும் போதே அவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், எங்களுடைய அரசியல் பயணம் ஏழைகளுக்கான அரசியல் பயணமாக இருக்கும். மக்களின் தேவைக்காக ஆளுமை மிக்கவர்களை ஒன்றிணைந்து, பாதை மாறிப் போகும் தமிழ்த் தேசியத்தைச் சரியான பாதைக்குக் கொண்டு வருவோம்.

தமிழ்த் தேசியம் பேசும் போலித் தேசியவாதிகளை இனம் கண்டுள்ளோம். அதனால் சமூகப் பொறுப்புள்ள துடிப்புள்ள இளையோரை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும். எனவே, தமிழ் மக்கள் மிகச் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்

எமது போராட்டத்தை அரசியல்சார்பற்று முன்னெடுத்தோம். அரசியல்வாதிகள் விட்ட தவறுகளைச் சுட்டிக் காட்டிய போது எனக்கு எதிராகத் திரும்பினார்கள்.

அப்போதே அரசியல்வாதிகள் எல்லோரும் மக்களை ஏமாற்றி வருகின்றார்கள் என்பதனை அறிந்து கொண்டேன். உண்மையான அரசியல் செய்ய நிதி தேவையில்லை. அரசியல் செய்ய எனக்கு இரண்டு வருடச் சம்பளம் போதும். மக்களுக்காக அரசியல் செய்யப் பணம் தேவையில்லை. எனக்கு 10 கோடி ஷரூபாய் பெறுமதியான காணி இருக்கு. அது எனக்குப் போதும். மக்களிடம் பணம் பெற்றால் அது தொடர்பில் வெளிப்படைத் தன்மையாக செயற்படுவோம், என்றார். (01)




# 24 மணித்தியாலங்களுக்கு மழை தொடரும்! வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கை

நாட்டின் பல பகுதிகளில் சீரற்ற காலநிலை தொடரும் நிலையில், எதிர்வரும் 24 மணித்தியாலத்திற்குள் தெற்கு வங்கக் கடலோரப் பகுதிகளில் பலத்த மழை, பலத்த காற்று மற்றும் கடல் சீற்றம் என்பன காணப்படும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தொடர்ச்சியாக நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

16 மாவட்டங்களில் 69 பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த 158,391 பேர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சீரற்ற காலநிலையால் இதுவரையில் 3 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும், 240 வீடுகளுக்கு பகுதியளவில் சேதம் ஏற்பட்டுள்ளதுடன், 1,753 குடும்பங்களைச் சேர்ந்த 9,663 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டுள்ளது.



நிலவும் சீரற்ற வானிலை காரணமாக கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவிலான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அதன்படி, கம்பஹா மாவட்டத்தில் 20,553 குடும்பங்களைச் சேர்ந்த 82,839 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இதற்கு அடுத்த படியாக கொழும்பு மாவட்டத்தில் 10,914 குடும்பங்களைச் சேர்ந்த 40,231 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

நிலவும் அதிக மழையுடன் கூடிய வானிலையால் களு, களனி, ஜின் மற்றும் அத்தனகலு ஓயா ஆகியவற்றின் நீர் மட்டம் அதிகரித்துள்ளமையால் குறித்த கங்கைகளை அண்மித்த தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், தென்கிழக்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலத்தினால், எதிர்வரும் இரண்டு நாட்களில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி, மேற்கு – வடமேற்குத் திசையில் வட தமிழகம், புதுச்சேரி மற்றும் அதை அண்மித்த பகுதியான தெற்கு ஆந்திரா கடற்கரையை நோக்கி நகரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)



# வீட்டு உரிமையாளரின் அலட்சியத்தால் தவறி வீழ்ந்து உயிரிழந்த இளம் பெண்

பத்தரமுல்ல பிரதேசத்தில் இரண்டு மாடி வீடொன்றின் பாதுகாப்பற்ற பகுதியிலிருந்து தவறி வீழ்ந்து இளம் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

வீட்டு உரிமையாளரின் அலட்சியம் காரணமாகவே குறித்த யுவதி உயிரிழந்துள்ளதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

சம்பவத்தில் உயிரிழந்த 30 வயதான ஹன்சினி பாக்யா என்பவர், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளராகப் பணியாற்றி வந்துள்ளார்.

பத்தரமுல்லை பிரதான வீதி, சம்பத் பிளேஸில் அமைந்துள்ள இரண்டு மாடி வீடொன்றின் மேல் மாடியில் மற்றுமொரு தோழியுடன் அவர் தங்கி இருந்துள்ளார்.

கடமை முடிந்து கடந்த 11 ஆம் திகதி மாலை 6.40 அளவில் ஹன்சினி தனது தங்கும் விடுதிக்கு வந்துள்ளார். அதன்பின்னர் ஹன்சினி இரவு உணவைத் தயார் செய்து கொண்டிருந்த போது குளியலறையில் இருந்த தோழிக்கு ஏதோ விழும் சத்தத்துடன் அலறல் சத்தம் கேட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

உடனடியாக குளியலறையில் இருந்து வெளியே வந்த தோழி, தங்குமிடத்திற்குப் பின்னால் உள்ள பாதுகாப்பற்ற இடத்தில் இருந்து ஹன்சினி கீழே விழுந்து கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்.

மேல் தளத்தில் உள்ள குறித்த பாதுகாப்பற்ற இடத்திற்கு எவ்வித பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனத் தெரியவந்துள்ளது.

பின்னர், ஹன்சனியை உடனடியாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கு பிரதேசவாசிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். எனினும், வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த ஹன்சினி நேற்று மதியம் உயிரிழந்துள்ளார்.

## பொதுநலவாய விளையாட்டுக்களில் பதக்கம் வென்ற புஷாந்தன் இன்று நாடு திரும்பினார்




பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில், பழுதூக்கும் பிரிவில் கலந்து கொண்டு இலங்கை சார்பாக பதங்கங்களை வென்ற யாழ்ப்பாணம் சாவகச்சேரியைச் சேர்ந்த, குணம் புஷாந்தன் இன்று அதிகாலை நாடு திரும்பியுள்ளார்.

குணம் புஷாந்தனுக்கு மூன்று பிரிவுகளில் பதக்கங்கள் கிடைத்துள்ளன. டெட்லிப்ட் போட்டிப்பிரிவில் தங்கப்பதக்கத்தையும், பென்ச்ப்ரெஸ் போட்டிப்பிரிவில் வெள்ளிப்பதக்கத்தையும் ஸ்குவாட் போட்டிப்பிரிவில் வெண்கலப் பதக்கத்தையும் இவர் வென்று சாதனை படைத்துள்ளார்.

பொதுநலவாயப்போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கம் வெற்று, இலங்கைக்குப் பெருமை சேர்த்த இவருக்கு லைக்கா ஞானம் அறக்கட்டளை அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (04)




## கரப்பந்தாட்ட சீருடைகள் வழங்கிவைக்கப்பட்டன

(பி.கேதீஸ்)

தலவாக்கலை சித்ரா கோல்ட் ஹவுஸ் உரிமையாளர் விஜேந்திரனின் நிதி அனுசரணையில் தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலை கரப்பந்தாட்ட அணியினருக்கு இலவசமாக சீருடைகள் இன்று வழங்கப்பட்டன.

இதன்போது தலவாக்கலை அனுசரணையாளர் விஜேந்திரன், பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம். பாரிஸிடம் சீருடைகளைக் கையளித்தார்.

இந்நிகழ்வில் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.




## கொழும்பு - நுவரெலியா வீதியூடான போக்குவரத்து வழமைக்கு திரும்பியது




பாதிக்கப்பட்டிருந்த கொழும்பு - நுவரெலியா பிரதான வீதியினூடான போக்குவரத்து நடவடிக்கை வழமைக்குத் திரும்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வீதியில் சீமெந்து ஏற்றிச் சென்ற கொள்கலன் லொறியொன்று, இன்று காலை கினிகத்தேனை வைத்தியசாலைக்கு அருகில் விபத்துக்குள்ளானது.

கொள்கலனின் பின் பகுதிச் சக்கரங்கள் வீதியின் அருகிலுள்ள வடிகானில் தாழிறங்கியமையினால் விபத்து ஏற்பட்டது.

இதன் காரணமாக பாடசாலை மாணவர்கள், அரச, தனியார் நிறுவன ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். கினிகத்தேன பொலிஸார் தடைப்பட்ட வீதிக்குப் பதிலாக மாற்று வீதிகள் ஊடாக போக்குவரத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருந்தனர். (04)

# வாகன இறக்குமதிக்கு முறையான நடைமுறை அமைச்சர் விஜித ஹேரத் தகவல் தெரிவித்தார்

நாட்டிலுள்ள வெளிநாட்டுக் கையிருப்புக்கள் தீர்ந்து போகாத வகையில், முறையான நடைமுறையின் கீழ் மாத்திரமே வாகன இறக்குமதி மேற்கொள்ளப்படும், என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது, வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அதிக தேவை உள்ளது. முன்னதாக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சரவையில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஆயினும், இதுவரை நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு எந்த வாகனத்தையும் இறக்குமதி செய்யவில்லை. அதேநேரம், எந்தவொரு வகையிலும் கட்டணச் சலுகைகளுடன் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை, என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

(04)



# ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணியில் ஏக்கல உப மின் நிலையத்தை அமைப்பதற்கு அனுமதியளிப்பு!




இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணியினை ஏக்கல உப மின்நிலையத்தை அமைப்பதற்காக இலங்கை மின்சார சபைக்கு ஒப்படைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஏக்கல மற்றும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களில் காணப்படும் அதிக மின்சாரக் கேள்விக்கமைய, தொடர்ச்சியான மின்வழங்கலைப் போன்று, தற்போது நிலவுகின்ற மின்கட்டமைப்பின் தரப்பண்பான நிலைமையை அதிகரிக்கும் நோக்கில், ஏக்கல கைத்தொழில் பேட்டையில் உப மின் நிலையத்தை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஏக்கல சென்ட்குறோப்தோட்டத்திற்கு அண்டியதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 10 ஏக்கர் காணியில், 2 ஏக்கர் 2 றூட் அளவுடைய காணித்துண்டைப் பயன்படுத்தி குறித்த உபமின்நிலையத்தை அமைப்பது பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, அரச பிரதம மதிப்பீட்டாளரின் விலைமதிப்பீட்டுப் பெறுமதியான 320 மில்லியன் ஷரூபாவை அறவிட்டு, குறித்த காணித்துண்டை இலங்கை மின்சார சபைக்கு ஒப்படைப்பதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூகப்பாதுகாப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(04)



# கிழக்கு மாகாண ஆளுநரது பிரத்தியேக நியமனங்களில் முஸ்லிம் ஒருவர் இல்லாதது கவலையைத் தருகின்றது!

## முன்னாள் எம்.பி இம்ரான் மகரூப் கருத்து



(ஹஸ்பர் ஏ.எச்)

கிழக்கு மாகாணத்திற்கு புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள ஆளுநர் நியமித்த அவரது பிரத்தியேக ஆளணியில் முஸ்லிம் ஒருவர் இல்லாதது மிகவும் கவலையைத் தருகின்றது, என திருகோணமலை மாவட்ட ஐக்கிய மக்கள் கூட்டணியின் முதன்மை வேட்பாளரும், முன்னாள் எம்.பியுமான இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

கிண்ணியா குறிஞ்சாக்கேணியில் நேற்று திங்கட்கிழமை (14) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு அவர் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர சமீபத்தில் அவரது பிரத்தியேக ஆளணியில் பிரத்தியேகச் செயலாளர், பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர், ஊடகச் செயலாளர் என 3 நியமனங்களைச் செய்துள்ளார். இந்த நியமனங்களில் முஸ்லிம் ஒருவரும் உள்வாங்கப்படாமை எனக்கு மிகவும் கலையைத் தருகின்றது.

கிழக்கு மாகாணம் 3 இனங்களும் வாழும் மாகாணம். இதில் முஸ்லிம்கள் கணிசமான தொகையினர். எனவே, இம்மாகாண முஸ்லிம்களது கலாசார பாரம்பரியங்கள் அவர்களது பிரச்சினைகள் தொடர்பாக ஆளுநர் தெரிந்து கொண்டால்தான் சகலருக்கும் நீதியான சேவையை வழங்க முடியும்.

இவ்வாறான நிலையில், ஆளுநரது பிரத்தியேக ஆளணியில் முஸ்லிம் ஒருவர் இருந்தால் அவருக்கு முஸ்லிம்கள் தொடர்பான தேவையான தகவல்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். குறைபாடுகளைத் தவிர்த்துக் கொள்ளக் கூடிதாக இருக்கும். தற்போது அந்தச் சந்தர்ப்பம் ஆளுநருக்கு இல்லாமல் உள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர் நல்ல மனிதர். கல்விமான். பல்கலைக்கழக மட்டத்தில் நியாயமான முறையில் சேவை வழங்கியுள்ளார் என்றெல்லாம் நான் அறிந்துள்ளேன். அவர் வகித்த முன்னைய பதவிகள் அனைத்தும் அலுவலகம் சார்ந்த பதவிகள். அதனால், அவரால் எவ்வித தலையீடும் இன்றி சுதந்திரமாக பணியாற்ற முடிந்தது

எனினும், தற்போது அவர் வகிப்பது அரசியல் ரீதியான பதவி. வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பொறுத்த வரையில் இங்கு இனரீதியான அரசியல் ஊறிப் போயுள்ளது. இந்நிலையில், அரசியல்வாதிகள் தங்களது கோரிக்கைகளை வெல்வதற்காக அடுத்த இனத்தைக் குறைகூறும் பண்பு இருப்பதை கிழக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் நான் அவதானித்துள்ளேன். இதனால், முஸ்லிம்களுக்கு அநீதி இடம்பெற்ற சம்பவங்களும் உண்டு. இந்நிலையில் முஸ்லிம்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படும் போது அதன் உண்மைத் தன்மையை ஊர்ஜிதப்படுத்திக் கொள வதற்கு நம்பிக்கை மிகுந்த ஒருவர் அளுநரது அருகில் இருப்பது அவசியமென நான் கருதுகின்றேன். அவ்வாறான ஒருவர் தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவராய் இருந்தால்கூடப் பரவாயில்லை.

எனவே, இந்த விடயங்களை ஆளுநர் கவனத்தில் கொள்ள வேண்டும். அவரது நியாயமான செயற பாடுகளுக்கும், எமது கட்சியும் நாட்டு மக்களும் எதிர்பார்க்கும் சிறந்த மாற்றத்திற்கும் இது உறுதுணையாக இருக்கும், என்று குறிப்பிட்டார்.









## 36 வருட கல்விச் சேவையாற்றிய ஆசிரியர் றபீக் ஓய்வுபெற்றார்

(வி.ரி. சகாதேவராஜா)

36 வருடங்கள் கல்விச் சேவையாற்றி ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வு பெற்ற இறக்காமத்தைச் சேர்ந்த ஏ.எல்.றபீக் ஆசிரியருக்கான பிரியாவிடை கடந்த வாரம் ஆசிரியர் தின நிகழ்வில் இடம் பெற்றது.

இறக்காமம் றோயல் கனிஷ்ட கல்லூரியில் ஆசிரியர் தின நிகழ்வும், 36 வருடம் சேவையாற்றி ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வுபெற்ற றபீக் ஆசிரியருக்கான பிரியாவிடை நிகழ்வும் அதிபர்

எம்.ஏ.எம்.பஜீர் தலைமையில் இடம்பெற்றன.

“மழைமேகங்களுக்கு மண்ணின் மரியாதை” எனும் தலைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இறக்காமல் கோட்டக் கல்வி அதிகாரி யூ.எல்.மஹ்மூது லெவ்வையும், விசேட அதிதியாக ஆசிரிய ஆலோசகர் எஸ்.எல்.ஏ.முனாப் மற்றும் பா.அ.ச.செயலாளர் ஏ.கே.அஸ்வர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# சுற்றுச்சூழலை பாதுகாத்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வேலைத்திட்டம்!



(மாளிகைக்காடு செய்தியாளர்)

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள கிரீன் பீல்ட் வீட்டுத்திட்ட சுற்றுச்சூழல் மற்றும் அதனை அண்டியுள்ள வாய்க்கால்என்பன சிரமதானம் ஊடாக துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

குறித்த வீட்டுத்திட்ட சுற்றுச்சூழலிலும் அங்குள்ள வாய்க்கால்களிலும் பொது மக்கள் குப்பைகளை கொட்டி வருகின்றனர். இந்தச் செயற்பாட்டினை தடுக்கும் பொருட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறார்.




அந்த வகையில், பிராந்திய பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் திருமதி எஸ்.எப்.இசட்.சராப்டீனால் சிரமதான நிகழ்வொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

கல்முனை மாநகர சபை, நீர்ப்பாசனத் திணைக்களம், கல்முனை பொலிஸார் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளின் ஒத்துழைப்புடன் குறித்த சிரமதானப் பணி வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை கிரீன் பீல்ட் வீட்டுத்திட்ட சுகாதார கழிவு முகாமைத்துவம் தொடர்பாக அங்குள்ளவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டதுடன் அதனை முறையாக மேற்கொள்வதற்குரிய சில உதவிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த சிரமதான நிகழ்வில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர், பிராந்திய தொற்றா நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஐ.எம்.எஸ்.இர்ஷாத் உள்ளிட்டவர்களுடன் சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள் ஊழியர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், மாநகர சபை உத்தியோகத்தர்கள் ஊழியர்கள், நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்கள் ஊழியர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

# கல்முனை மாநகர பாதீட்டுக்கு முன்மொழிவுகள் கோரப்பட்டன




(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையின் 2025ஆம் ஆண்டுக்கான பாதீட்டிற்கு பொது மக்களிடம் இருந்து ஆக்கபூர்வமான முன்மொழிவுகள் எதிர்பார்க்கப்படுவதாக மாநகர ஆணையாளர் என். எம். நௌபீஸ் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம், பொது நல அமைப்புகள் மற்றும் பொது மக்கள் எவராயினும் தமது முன்மொழிவுகளை எதிர்வரும் 2024.10.28 ஆம் திகதிக்கு முன்னதாக எழுத்து மூலம் சமர்ப்பிக்க முடியும் எனவும் அதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் முன்மொழிவுகளை பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கல்முனை மாநகர சபையின் அடுத்த ஆண்டுக்கான பாதீட்டைத் தயாரிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

இந்நிலையில், மக்களினதும் பொது அமைப்புகளினதும் ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை உள்வாங்கி சிறந்ததொரு சாத்தியப்பாடான வரவு – செலவுத் திட்டத்தை தயாரித்து, மாநகர சபையை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும் என்ற உயரிய நோக்கை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறு முன்மொழிவுகள் கோரப்படுவதாக ஆணையாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# அர்ஜுன அலோசியஸ் உள்ளிட்ட மூவருக்கு 6 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது!

## மேல்முறையீட்டு மனுவும் நிராகரிப்பு



அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய 355 கோடி ரூபாய் வரியைச் செலுத்தத் தவறிய குற்றச்சாட்டில் டபிள்யூ.எம். மெண்டிஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அர்ஜுன அலோசியஸ் உள்ளிட்ட மூவருக்கு 6 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தாக்கல் செய்த வழக்கு விசாரணையில் நேற்று இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய 355 கோடி ரூபாய் வற் வரியை மோசடி செய்தமை தொடர்பில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதேவேளை, கொழும்பு நீதவான் நீதிமன்றினால் விதிக்கப்பட்ட 6 மாத சிறைத்தண்டனை உத்தரவை ரத்துச் செய்யுமாறு கோரி அர்ஜுன அலோசியஸ் தரப்பில் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை கொழும்பு நீதவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது. செலுத்த வேண்டிய வரித் தொகையைத் தவணை முறையில் செலுத்த அனுமதிக்குமாறும் குறித்த மேன்முறையீட்டின் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்ததாகத் தெரியவருகிறது. (04)

# ஐசிசியின் சிறந்த வீரர் விருதை பெறுகிறார் கமிந்து மெண்டிஸ்!



சர்வதேச கிரிக்கெட் சபையின் செப்டம்பர் மாதத்திற்கான சிறந்த வீரராக இலங்கைக் கிரிக்கெட் அணி வீரர் கமிந்து மெண்டிஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, இந்த ஆண்டில் அவர் இந்த விருதை வெல்வது இது இரண்டாவது முறையாகும்.

அதன்படி, 2024 இல் ஐசிசியின் சிறந்த வீரர் விருதை இரண்டு முறை வென்ற முதல் வீரர் என்ற பெருமையை இவர் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

# ஈரான் மீது ஐரோப்பிய ஒன்றியம் புதிய பொருளாதாரத் தடை!



ஈரானுடன்தொடர்புடைய ஏழு தனிநபர்கள் மற்றும் ஏழு நிறுவனங்களுக்கு எதிரான புதிய பொருளாதாரத் தடைகளுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவு அமைச்சர்கள் ஒப்புதல் அளித்துள்ளனர்.

பிரஸ்ஸல்ஸில் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் உக்ரேன் மீதான போருக்காக ரஷ்யாவிற்கு ஏவுகணைகளை ஈரான் வழங்கியமைக்காக இந்தத் தடை உத்தரவை விதிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதில் ஈரான்நாட்டின் முதன்மையான விமான நிறுவனமான ஈரான் எயார், அத்துடன் விமான நிறுவனங்களான சாஹா எயார்லைன்ஸ் மற்றும் மஹான் எயார் ஆகியவையும் அடங்குகின்றன.

அதேநேரம், தடைகளை எதிர்கொண்ட நபர்களில் ஈரானின் துணை பாதுகாப்பு அமைச்சர் செயத் ஹம்சே கலந்தாரியும் ஒருவராவார்.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகியவை ஈரான் பொலிஸ்டிக் ஏவுகணைகள் மற்றும் அதனுடன்தொடர்புடைய தொழிநுட்பத்தை உக்ரேனுக்கு எதிராக ரஷ்யாவிற்கு ஒரு மாதத்திற்கு முன்பே அனுப்பியதாகக் குற்றம் சாட்டியிருந்தன.

உக்ரேனுக்கு எதிரான தனது போருக்காக கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை ரஷ்யா பெற்றுள்ளதை உறுதிப்படுத்திய பின்னர், தெஹ்ரான் மீதான பொருளாதாரத் தடைகளை பரிசீலிப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் கடந்த மாதம் கூறியது.

குற்றச்சாட்டுகள் பற்றி கேள்விகள் எழுப்பப்பட்ட போது, மொஸ்கோ அதற்கு மறுப்பு வெளியிடவில்லை. மாறாக தெஹ்ரானுடன் வளர்ந்து வரும் உறவு குறித்த கருத்தினை வெளியிட்டிருந்தது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் போர் தொடங்கியதில் இருந்து ஈரான் ரஷ்யாவிற்கு நூற்றுக்கணக்கான ட்ரோன்களை வழங்கியுள்ளது. எனினும் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளின் விநியோகம் உக்ரேன்- ரஷ்ய மோதலில் ஈரானின் ஆழ்ந்த ஈடுபாட்டை எடுத்துக்காட்டுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. (04)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.10.2024 இல் வெளியிடப்பெற்றது.